[1970 ஆகஸ்ட் 29

துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

*124. வினு.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல்லில் ஒரு புதிய Sub-Employment Office ஏற்படுத்த தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணை வேலை வாய்ப்பு அலுவலகம் (Sub-Employment Office), திண்டுக்கல் 24—11—1969 அன்றிலிருந்து இயங்கத் தொடங்கிவிட்டது.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் இருப்பதுபோல் திருச்சி மாவட்டத்தில் அதுமாதிரி "சப்-எம்பிளாய்ண்மெண்ட்" ஆபீஸ் ஏற்படுத்திஞல் பல மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். புதுக்கோட்டையில் அதுமாதிரி ஏற்படுத்த அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலைவாய்ப்பு நிறுவனத்தை ஏற்படுத்துவதைக் காட்டிலும் வேலை தரும் நிறுவனங்களை தொடங்கு வதில் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அடுத்த மாத இறுதியில் கூட மத்திய தொழில் அமைச்சரும், நம்முடைய முதலமைச்சரும் அதுபற்றிய ஒரு கண் காட்சியை திருச்சியிலே நடத்துவதற்கு முயற்சி எடுத்து இருக்கிருர்கள். ஆனுல், இந்த வேலை வாய்ப்பு துணை அலுவலகங்களைப் பொறுத்த வரையில் 10 தொடங்க லாம் என்று இருக்கிறேம். அதிலே இரண்டு தொடங்குவதற்கு இப்போது அனுமதி தந்திருக்கிறது. ஒன்று திண்டுக்கல்லிலும் மற்றென்று ஈரோட்டிலும் தொடங்குவதாக இருக்கிறது.

Grant for Central Textile Research Institute at Coimbatore.

*125 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any grant has been made to the Central Textile Research Institute, Coimbatore by the State Government during 1969–70; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

அணைக்கட்டுகள்

* 126 வினு—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் அருகே செங்கப்படை கிராமத்துக்குப் பக்கத்தில் உள்ள காட்டாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லே.

(இ) வின எழாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதி இராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டி இருப்பதாலோ என்னவோ இராமநாதபுரம் மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் வரட்சி இந்தப் பகுதியில் ஏற்படுகிறது. இந்தக் காட்டாற்றில் மழை காலங்களில் அதிகமான தண்ணீர் வந்து குண்டாற்றில் கலந்து வங்காளக் கடலில் வீணே விழுகிறது. எனவே, இந்தக் காட்டாற்றின் குறுக்கே இதுவரை அணை கட்டும் திட்டம் இல்லாவிட்டாலும் இனியாவது இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செங்கப்படை கிராமத்தின் தெற்கே 3 மைல் தொலேவில் ஓடும் புளியம்பட்டி ஓடையை கள்ளிக்குடி கிராமம் வெள்ளாகுளத்துடன் முடியும் அரசங்குளம், செங்குளம் முதலான தொடர் இணைப்பு கண்மாய்கள் பயன் அடையும்படி திருப்பிவிடும் ஒரு திட்டம் உள்ளது. அது விரிவான அளவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : எந்த அளவுக்கு இந்தத் திட்டம் இப்போது செயல்பட்டு வருகிறது? எப்போது முடிவடையும்? திட்டவட்டமான அறிவிப்புத் தேவை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. விரைவில் செய்யப்படும்.

* 127 வின—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் கூற்றத்திலுள்ள வார்ப்பட்டை ஒட்டியுள்ள பிரான் மலேயின் அடிவாரத்தில் அணை எழுப்பி நீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லே.

புலவர் பொ. பொன்னம்பலம் : வார்ப்பட்டை ஒட்டியுள்ள பிரான்மலேயின் நீர்த்தேக்கத்தை உருவாக்குகிற காரணத்தால் நல்ல நீர் பாசன வசதி ஏற்படுகிறது. அதனுல் அரசு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருமயம் வட்டம் திருப்பக்குட்டு, தொரடைக்குட்டு என்ற குன்றுகளின் இடையில் கண்மாய் எழுப்பும் திட்டமாகும். பிடிக்கும் பரப்பளவு அதில் குறைவாக இருப்பதனுல் அதிகக் கொள்ளளவை எதிர்பார்க்க முடியாது. மேலும் இதனுல் பயன் அடையும் நீர் கண்மாய் 4,000 அடி தொலேவில் இருப்பதால் அதை 700 அடிக்கு அருகாமையில் கொண்டுவர மலேயை உடைக்க வேண்டியிருப்பதாலும் செலவு அதிகமாகும் என்கிற காரணத்தால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வில்லே.